# தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பிற்கான மாணவர் சேர்க்கை 2020–2021

# விண்ணப்பக் கையேடு

## DIET/GTTI/BITE நிறுவனங்களுக்குரியது

## 2020–2021 ஆம் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கையின் போது கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,
சென்னை – 600 006.

**மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6**

**தொடக்கக்கல்வி பட்டயப் படிப்பு (D.El.Ed.) – முதலாமாண்டு மாணவர் சேர்க்கை 2020–2021**

**விண்ணப்பதாரர்களுக்கான தகவல்கள் மற்றும் விளக்கங்கள்**

**அ. விண்ணப்பிக்கத் தேவையான தகுதிகள்**

**1. கல்வித்தகுதி :**

1.1 பொது பிரிவைச் சார்ந்த விண்ணப்பதாரர்கள் மேல்நிலைக்கல்வித் தேர்வில் 50 விழுக்காடு மதிப்பெண்கள் (600/1200 – 300/600) பெற்றுத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

1.2 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC), பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் (BCM), மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (MBC), ஆதிதிராவிடர் (SC), ஆதிதிராவிட அருந்ததியர் (SCA) மற்றும் பழங்குடியினர் (ST) மேல்நிலைக்கல்வித் தேர்வில் தேர்ச்சி பெற்று 45 விழுக்காடு மதிப்பெண்கள் (540/1200 – 270/600) பெற்றிருக்க வேண்டும்.

1.3 தமிழ் / தெலுங்கு / உருது ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைப் பயிற்று மொழியாகக் கொள்ள விரும்பும் மாணவர்கள், அம்மொழியைப் பகுதி ஒன்றிலோ அல்லது பகுதி இரண்டிலோ மொழிப்பாடமாகப் பன்னிரண்டாம் வகுப்புவரை பயின்றிருத்தல் வேண்டும்.

1.4 ஆங்கில வழியில் பயில விரும்பும் விண்ணப்பதாரர்கள் மேல்நிலைக்கல்வியை (+2 வரை) ஆங்கில வழியில் கட்டாயம் பயின்றிருக்க வேண்டும்.

**2. வயது வரம்பு:**

2.1 விண்ணப்பதாரர் 31.07.2020 அன்று 30 வயதிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

2.2 ஆதிதிராவிடர், ஆதி திராவிட அருந்ததியர், பழங்குடியினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் 31.07.2020 அன்று 35 வயதிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

2.3 (i) ஆதரவற்றோர் (Orphans), கணவனால் கைவிடப்பட்டோர் மற்றும் கைம்பெண்கள் (Widows) 31.07.2020 அன்று 40 வயதிற்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

(ii) கலப்பினத் தம்பதியரில் பொது, பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் இனம் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் 31.07.2020 அன்று 32 வயதிற்கு மிகாமலும், கலப்பினத் தம்பதியரில் ஆதிதிராவிடர், ஆதிதிராவிட அருந்ததியர், பழங்குடியினர் 31.07.2020 அன்று 37 வயதிற்கு மிகாமலும் இருத்தல் வேண்டும் .

**3. இருப்பிடம்:**

**தமிழகத்தைச் சார்ந்த விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே சேர்க்கை வழங்கப்படும்.**

**ஆ. ஒதுக்கப்பட்ட இடங்களும் கல்வி நிறுவனங்களும்**

**4. ஒதுக்கப்பட்ட இடங்கள் :**

4.1 இணைப்பு 1ல் காணப்படும் 12 மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களில் மட்டுமே ஆசிரியர் கல்வி பட்டயப் பயிற்சி நடைபெற உள்ளது. அவற்றில் 50% இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

4.2 நிறுவனங்களின் பெயர்களை அறிந்து கொள்ள இணைப்பு–1 இல் **www.tnscert.org**. என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

4.3 தமிழ் / ஆங்கிலம் / தெலுங்கு / உருது ஆகிய மொழிகளைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயில விரும்பும் விண்ணப்பதாரர்கள் அதற்குரிய கட்டத்தில் ( √ ) செய்யவும். இணைப்பு –2 இல் **www.tnscert.org** என்ற இணையதளத்தைப் பார்க்கவும்.

**5. விண்ணப்பங்களைப் பெறுதல் :**

5.1 விண்ணப்பங்களை **17.08.2020** முதல் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யலாம். விண்ணப்பக் கட்டணம் பொதுப் பிரிவு / பிற்படுத்தப்பட்ட வகுப்பு / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு ரூ.500/–. ஆதி திராவிடர் SC/ஆதி திராவிடர் அருந்ததியர் SCA/பழங்குடியினர் ST / மாற்றுத் திறனாளி (Person With Disabilities) பிரிவினருக்கான கட்டணம் **ரூ.250.00.**

விண்ணப்பங்கள் இணையதளத்தில் www.tnscert.org என்ற முகவரியில் **17.08.2020** அன்று காலை **10.00** மணி முதல் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விணையதளத்தில் உரிய கட்டணத்தை செலுத்தி தங்களது விவரங்களை பதிவேற்றம் செய்யலாம். கட்டணம் செலுத்துவதற்கு தங்களது பற்று அட்டை (Debit Card) கடன் அட்டை (Credit Card) மற்றும் இணைய வங்கிச் சேவை (Internet Banking) ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி செலுத்தலாம்.

மாணவர்கள் இணையதளத்தில் தங்களது விவரங்களை ஒவ்வொன்றாக உள்ளீடு செய்து, அனைத்து விவரங்களையும் பதிவிட்ட பின் சேமிப்பு (Save) பொத்தானை அழுத்த வேண்டும். பிறகு பணம் செலுத்துவதற்கான தளம் உருவாகும். இத்தளத்தில் பணம் செலுத்திய பிறகுதான் தங்களது விண்ணப்பம் முழுமையாக பதிவேற்றம் செய்யப்படும். இணையதளத்தில் விண்ணப்பதாரர் அளிக்கும் விவரங்கள் சரியானதாக இருக்க வேண்டும். அவர் அளிக்கும் விவரங்கள் கலந்தாய்வின் போது சரிபார்க்கப்பட்டு உறுதி செய்த பின்பு அவரது சேர்க்கை உறுதி செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

**6. விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவேற்ற இறுதி நாள் :**

விண்ணப்பங்களை இணையதளத்தில் **பதிவேற்ற இறுதி நாள் 28.08.2020** மாலை 05.00 மணி வரை பதிவேற்றம் செய்யலாம்.

**7. தேர்ந்தெடுக்கும் முறையும் சேர்க்கையும்:**

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கான அழைப்புக் கடிதம் இணையதளத்தில் வெளியிடப்படும். தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்திற்கு குறித்த நாளில் அனைத்து உண்மைச் சான்றுகளையும் ஒப்படைத்து உரிய கட்டணம் செலுத்தி சேர்க்கை பெறலாம்.

**விண்ணப்பங்களை ஆன்லைன் மூலம் கீழ்க்கண்ட மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலமாகவும் பதிவேற்றம் செய்யலாம்.**

**<u>மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன பட்டியல்</u>**

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|
| 1. | அரியலூர் | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>கீழப்பழூர் (அஞ்சல்), அரியலூர் மாவட்டம் – 621 707. |
| 2. | சென்னை | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>திருவல்லிக்கேணி, சென்னை மாவட்டம் – 600 005. |
| 3. | கோவை | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>இராஜ வீதி, கோவை – 641 001. |
| 4. | கடலூர் | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>வடலூர் (அஞ்சல்), கடலூர் மாவட்டம் – 607 303. |
| 5. | தர்மபுரி | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>புலிக்கரை, தர்மபுரி மாவட்டம் – 636 808. |
| 6. | திண்டுக்கல் | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>ஒட்டன்சத்திரம் (அஞ்சல்), திண்டுக்கல் மாவட்டம் – 624 619. |
| 7. | ஈரோடு | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>பெருந்துறை (அஞ்சல்), ஈரோடு மாவட்டம் –638 052. |
| 8. | காஞ்சிபுரம் | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>களியாம்பூண்டி (அஞ்சல்) உத்திரமேரூர் வழி,<br>காஞ்சிபுரம் மாவட்டம் – 603 442. |
| 9. | கன்னியாகுமரி | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>குலசேகரன் புதூர், தேரூர் (அஞ்சல்),<br>கன்னியாகுமரி மாவட்டம் – 629 303. |
| 10. | கரூர் | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>மாயனூர் (அஞ்சல்), கரூர் மாவட்டம் – 639 108. |
| 11. | கிருஷ்ணகிரி | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>கிருஷ்ணகிரி (அஞ்சல்), கிருஷ்ணகிரி மாவட்டம் – 635 002. |
| 12. | மதுரை | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>டி. கல்லுப்பட்டி (அஞ்சல்), திருமங்கலம் (வழி),<br>மதுரை மாவட்டம் – 625 702. |
| 13. | நாகப்பட்டினம் | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், குருக்கத்தி (அஞ்சல்),<br>நாகப்பட்டினம் மாவட்டம் – 611 105. |
| 14. | நாமக்கல் | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், நாமக்கல் (அஞ்சல்),<br>நாமக்கல் மாவட்டம் – 637 001. |
| 15. | பெரம்பலூர் | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், பாடலூர் (மேற்கு)<br>பெரம்பலூர்– 621 109 |
| 16. | புதுக்கோட்டை | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், புதுக்கோட்டை<br>(அஞ்சல்), புதுக்கோட்டை மாவட்டம் – 622 001. |
| 17. | இராமநாதபுரம் | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், மஞ்சூர் (அஞ்சல்),<br>பரமகுடி (வழி), இராமநாதபுரம் மாவட்டம் – 623 707. |
| 18. | சேலம் | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், உத்தமசோழபுரம்<br>(அஞ்சல்), சேலம் மாவட்டம் –636 010. |
| 19. | சிவகங்கை | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், காளையார்கோவில்<br>(அஞ்சல்), சிவகங்கை மாவட்டம்–630 551. |
| 20. | தஞ்சாவூர் | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>ஆடுதுறை (அஞ்சல்), தஞ்சாவூர் மாவட்டம் – 612 101. |

| | | |
|---|---|---|
| 21. | நீலகிரி | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>கோத்தகிரி (அஞ்சல்), நீலகிரி மாவட்டம் – 643 217. |
| 22. | தேனி | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், உத்தமபாளையம் (அஞ்சல்), தேனி மாவட்டம் – 625 553. |
| 23. | திருவண்ணாமலை | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கீழ்ப்பெண்ணாத்தூர் (அஞ்சல்),<br>திருவண்ணாமலை மாவட்டம் - 604 601 |
| 24. | தூத்துக்குடி | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>வானரமுட்டி (அஞ்சல்), கோவில்பட்டி (வழி),<br>தூத்துக்குடி மாவட்டம் – 626 721. |
| 25. | திருச்சி | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், பல்லவபுரம் (அ),<br>லால்குடி வட்டம், திருச்சி மாவட்டம் – 621 712. |
| 26. | திருநெல்வேலி | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், முனைஞ்சிப்பட்டி (அஞ்சல்),<br>திருநெல்வேலி மாவட்டம் – 627 355. |
| 27. | திருப்பூர் | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருமூர்த்தி நகர் (அஞ்சல்), உடுமலைப்பேட்டை (வழி),<br>திருப்பூர் மாவட்டம்–642 112. |
| 28. | திருவள்ளூர் | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>திரூர் (அஞ்சல்), திருவள்ளூர் மாவட்டம் – 602 025. |
| 29. | திருவாரூர் | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>மன்னார்குடி (அஞ்சல்), திருவாரூர் மாவட்டம் – 614 001. |
| 30. | வேலூர் | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், இராணிப்பேட்டை (அஞ்சல்), வேலூர் மாவட்டம் – 632 401. |
| 31. | விழுப்புரம் | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>ஜி. அரியூர் (அஞ்சல்), விழுப்புரம் மாவட்டம் – 605 751. |
| 32. | விருதுநகர் | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், பாலையம்பட்டி (அஞ்சல்), விருதுநகர் மாவட்டம் – 626 112. |

**8. இட ஒதுக்கீடு:**

**8.1** தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் அசல் சான்றிதழ்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் சரிபார்க்கப்பட்ட பின்னர், சேர்க்கைக் கட்டணமாக ரூ.3500/– ஐ செலுத்துவதற்கு தங்களது பற்று அட்டை (Debit Card) கடன் அட்டை (Credit Card) மற்றும் இணைய வங்கிச் சேவை (Internet Banking) ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி செலுத்தலாம்.

**8.2** மேல்நிலைக் கல்வியில் மாணவர்கள் பயின்ற பாடப்பிரிவிற்கு ஏற்ப ஒதுக்கீடு :

1. **அறிவியல் பிரிவு 50% இடங்கள்.**
2. **கலைப் பிரிவு 25% இடங்கள்.**
3. **தொழிற் பிரிவு 25% இடங்கள்.**

(ஆண்களுக்கும் பெண்களுக்கும் இந்தப் பாடவாரிமுறை ஒதுக்கீடு தனித்தனியாக வழங்கப்படும்)

**8.3 வகுப்பு வாரி ஒதுக்கீடு :**

மாணவர்கள் சேர்க்கை தமிழகஅரசு நிர்ணயித்துள்ள வகுப்பு வாரி இட ஒதுக்கீட்டின் படி கீழ்க்கண்டவாறு அமையும்.

1. பகிரங்கப் போட்டி (Open Competition) – 31 %
2. பிற்படுத்தப்பட்ட வகுப்பு (பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் இனத்தவருக்கு 3.5% உட்பட) – 30 %
3. மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர் மரபினர் – 20 %
4. ஆதிதிராவிடர் (அருந்ததியருக்கான 3% உள் ஒதுக்கீடு உட்பட) – 18 %
5. பழங்குடியினர் – 1 %

**8.4** இரு விண்ணப்பதாரர் பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வில் ஒரே மதிப்பெண்கள் பெற்றிருக்கும் பட்சத்தில், தெரிவு முறை அவர்களது பிறந்த தேதியை அடிப்படையாகக் கொண்டு செய்யப்படும். மூத்தவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். இரு விண்ணப்பதாரர் ஒரே மதிப்பெண்ணும் ஒரே பிறந்த தேதியும் பெற்றிருப்பின் பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்றவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**8.5 அனைத்துத் தெரிவுகளும் தற்காலிகமானவை. விண்ணப்பதாரர் அளித்துள்ள தகவல்கள் குறைபாடுடையதாகவோ, தவறானதாகவோ, மறைக்கப் பட்டதாகவோ இருந்து பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால், அவர்களது தெரிவும் சேர்க்கையும் எந்த நேரத்திலும் இரத்து செய்யப்படும்.**

**9. சிறப்புப் பிரிவினருக்கான இட ஒதுக்கீடு :**

| | | |
|---|---|---|
| அ. | முன்னாள் இராணுவத்தினரின் குழந்தைகளுக்கு 17 இடங்கள் (மாவட்ட முன்னாள் இராணுவத்தினருக்கான நல அலுவலரால் வழங்கப்பட்ட சான்றிதழின் உண்மை நகல் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்) | அரசு நிறுவனங்களில் – 17 இடங்கள் (ஒரு அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் இந்த ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை செய்யப்பட்டிருப்பின் அதனை இதர மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வருக்கு SMS அனுப்பி 17 இடங்களுக்கு மிகாமல் சேர்க்கை செய்வதை உறுதி செய்ய வேண்டும். ஒரு நிறுவனத்தில் ஒரு சேர்க்கை மட்டுமே செய்ய வேண்டும்). |
| ஆ | மாற்றுத் திறனாளிகளுக்கு மொத்தமுள்ள இடங்களில் 3% **(முழுவதும் பார்வையிழந்த, முழுவதும் வாய் பேச இயலாத மற்றும் முழுவதும் காது கேளாதவர் விண்ணப்பிக்கத் தகுதி அற்றவர்)** மாவட்ட மருத்துவக் குழுவால் (District Medical Board) வழங்கப்பட்ட சான்றிதழின் உண்மை நகல் இணைக்கப்பட வேண்டும். | ஒவ்வொரு நிறுவனத்திற்கும் 3% வீதம் சேர்க்கை செய்ய வேண்டும். |
| இ | சுதந்திரப் போராட்டத் தியாகிகளின் வாரிசுகள் (மகன்/மகள்/பேரன்/பேத்தி) – 4 இடங்கள்.<br>i. விண்ணப்பதாரருக்கும் சுதந்திரப் போராட்டத் தியாகிக்கும் இடையே உள்ள உறவுமுறையைக் குறிக்கும் வட்டாட்சியரால் வழங்கப்பட்ட வாரிசு சான்றிதழ் மற்றும்<br>ii. மத்திய / மாநில அரசால் வழங்கப்பட்ட தியாகிகள் சான்றிதழின் உண்மை நகல்கள் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். | அரசு நிறுவனங்களில் – 4 இடங்கள்<br><br>ஒரு அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் இந்த ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை செய்யப்பட்டிருப்பின் அதனை இதர மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வருக்கு SMS அனுப்பி 4 இடங்களுக்கு மிகாமல் சேர்க்கை செய்வதை உறுதி செய்ய வேண்டும். ஒரு நிறுவனத்தில் ஒரு சேர்க்கை மட்டுமே செய்ய வேண்டும். |

**10. விண்ணப்பதாரருக்குரிய முக்கியக் குறிப்புகள் :**

10.1 சிறப்புப் பிரிவினருக்கான இட ஒதுக்கீடு 9 (அ) மற்றும் 9 (ஆ) இல் ஏற்கனவே குடும்பத்தில் ஒருவர் சலுகை பெற்றிருந்தால் அக்குடும்பத்தில் மறுமுறை இன்னொருவருக்குச் சலுகை வழங்கப்படமாட்டாது.

10.2 **தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பு (D.E1.Ed), தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு மட்டுமே கற்பிக்க வேண்டியுள்ளதால் முழுவதும் பார்வையற்றோர், வாய் பேசாதோர் மற்றும் காது கேளாதோர் விண்ணப்பிக்கத் தகுதியற்றவர்கள். மற்ற தகுதியான மாற்றுத் திறனாளிகள் மாவட்ட மருத்துவக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்ட தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பு சேர்க்கைக்குத் தகுதியானவர் என்ற குறிப்புடன் கூடிய சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.**

10.3 சேர்க்கைக்கு வரும்போது சரிபார்த்தல் குழுவினரிடம் அனைத்து அசல் சான்றிதழ்களும் ஒப்படைக்கப்பட வேண்டும். உரிய அசல் சான்றிதழ் ஏதேனும் ஒப்படைக்க இயலாத பட்சத்தில் அவ்விண்ணப்பதாரருக்குச் சேர்க்கை வழங்கப்பட மாட்டாது.

10.4 விண்ணப்பதாரரே விண்ணப்பத்தைத் தெளிவாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மதிப்பெண்கள் உள்ளிட்ட அனைத்துத் தகவல்களும் உண்மையானவை என்பதை விண்ணப்பதாரர் உறுதி செய்தல் வேண்டும். கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானவை என்று கண்டறியப்பட்டால் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

10.5 விண்ணப்பதாரரால் சேர்க்கையின்போது ஒப்படைக்கப்பட்ட அனைத்து ஆவணங்களும் கூர்ந்தாய்வு செய்யப்பட்டுப் பின்னர் சரிபார்த்தலுக்காகத் தொடர்புடைய அலுவலருக்கு அனுப்பப்படும். ஆவணங்களின் உண்மைத் தன்மையில் குறை கண்டறியும் பட்சத்தில் விண்ணப்பதாரர் பின்வரும் விளைவுகளைச் சந்திக்க நேரும்.

**அ**. பட்டயப் படிப்புக் காலத்தின் எந்த நிலையிலும் விண்ணப்பதாரரின் சேர்க்கை தடைசெய்யப்படும்.

**ஆ**. விண்ணப்பதாரர் மற்றும் பெற்றோர் / பாதுகாவலர் உண்மையை மறைத்துப் பொய்யான தகவல் வழங்கியிருப்பின் அவர்கள் மீதும் சட்ட ரீதியான குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

<u>சரிபார்ப்புப் பட்டியல்</u>

**11. சேர்க்கையின் போது எடுத்து வர வேண்டிய சான்றிதழ்கள் :**

| **விண்ணப்பதாரர் கீழ்க்கண்ட சான்றிதழ்களைத் தகுதி வாய்ந்த அலுவலரிடம் சான்றொப்பம் பெற்று சேர்க்கைக்கு வரும்போது எடுத்து வருதல் வேண்டும்.** |
|---|

அ) கடைசியாகப் பயின்ற கல்வி நிறுவனத்திலிருந்து பெற்ற மாற்றுச் சான்றிதழ்.

ஆ) 10 மற்றும் +2 அல்லது அதற்கு இணையான படிப்பில் பெறப்பட்ட மதிப்பெண் பட்டியல்கள்.

இ) சாதிச் சான்றிதழ் (வருவாய் துறையில் துணை வட்டாட்சியர் தரத்திற்கு இணையான அலுவலரிடமிருந்து பெற்றிருத்தல் வேண்டும்). ஆதி திராவிடர் (SC) மற்றும் ஆதி திராவிட அருந்ததியர் (SCA) ஆகியோர் வட்டாட்சியரிடமிருந்து சாதிச் சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

ஈ) பழங்குடி இனத்தவர் (ST) தொடர்புடைய கோட்டாட்சியர் அல்லது வருவாய்த்துறை துணை ஆட்சியரிடமிருந்து பெறப்பட்ட சாதிச்சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

உ) வருவாய்த்துறையில் துணை வட்டாட்சியர் தரத்திற்கு இணையான அலுவலரிடமிருந்து பெற்ற குடியிருப்புச் சான்றிதழ் / இருப்பிடச் சான்றிதழ்.

ஊ) சிறப்புப்பிரிவு ஒதுக்கீட்டில் இடம் கோருபவர்கள் அதற்குரிய சான்றிதழ்களை பெற்று வருதல் வேண்டும்.

எ) கடைசியாக பயின்ற கல்வி நிறுவனத் தலைமையாசிரியரிடமிருந்து பெறப்பட்ட நடத்தைச் சான்றிதழ் (நடத்தை பற்றிய விவரம் மாற்றுச் சான்றிதழில் இடம் பெற்றிருப்பின் தனியாக மற்றொரு நடத்தைச் சான்றிதழ் அனுப்பத் தேவையில்லை).

ஏ) வயது வரம்பில் சலுகை கோரும் கைம்பெண் / கணவனால் கைவிடப்பட்டோர் / ஆதரவற்றோர்/ கலப்பினத் தம்பதியினர் கீழ்க்கண்ட ஆவணங்களை ஒப்படைக்க வேண்டும்.

i) கைம்பெண் – வட்டாட்சியரிடம் இருந்து பெறப்பட்ட கைம்பெண் சான்றிதழ், கணவரின் இறப்புச் சான்றிதழ் மற்றும் மறுமணம் செய்து கொள்ளாமைக்கான சான்றிதழ்.

ii) கணவனால் கைவிடப்பட்ட பெண் – வட்டாட்சியரிடம் இருந்து பெறப்பட்ட கணவரால் கைவிடப்பட்டமைக்கான சான்றிதழ்.

iii) ஆதரவற்றோர் – மாவட்ட சமூகநல அலுவலரிடம் இருந்து பெறப்பட்ட சான்றிதழ்.

iv) கலப்பினத் தம்பதியினருக்கான சான்றிதழ் – வட்டாட்சியரிடம் இருந்து பெறப்பட்ட சான்றிதழ்.

ஐ). பெயர் மாற்றம் அல்லது தலைப்பெழுத்து மாற்றம் – விண்ணப்பத்திலும், சான்றிதழ்களிலும் வேறுபடின் அதனை உறுதிப்படுத்தும் அரசிதழ் நகல்.

ஒ). மதம்–விண்ணப்பத்திலும், சான்றிதழ்களிலும் வேறுபடின் அதனை உறுதிப்படுத்தும் அரசிதழ் நகல்.

12. தங்களிடமுள்ள அனைத்து உண்மைச் சான்றிதழ்களைச் சேர்க்கையின் போது எவ்வித மாற்றமுமின்றி ஒப்படைத்தல் வேண்டும். சான்றிதழில் ஏதேனும் மாற்றம் ஏற்படின் விண்ணபதாரர் சேர்க்கைக்குத் தகுதியற்றவர் ஆவார். (தொடக்கக் கல்வி ஆசிரியர் பட்டயப் படிப்பிற்கு விண்ணப்பித்த பின் விண்ணப்பதாரர் வேறு நிறுவனத்தில் சேர்ந்து பயிலும் பட்சத்தில் அந்நிறுவனத்தால் வழங்கப்பட்ட சான்றிதழ் (Bonafide student certificate) சேர்க்கையின் போது ஏற்றுக்கொள்ளப்படும். இருப்பினும், விண்ணபதாரர் ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வரிடம் சேர்க்கையின் போது அனைத்து அசல் சான்றிதழ்களுடன் கடைசியாகப் பயின்ற நிறுவனத்தின் மாற்றுச் சான்றிதழையும் ஒப்படைக்க வேண்டும்.

13. விண்ணப்பதாரர் சேர்க்கை குறித்து விசாரிப்பதோ அல்லது எந்த விதமான கடிதத்தொடர்பு மேற்கொள்ளுவதோ கூடாது.

14. மாணவர்களின் இட ஒதுக்கீடு, அம்மாணவர்களின் விருப்பத்திற்கேற்ப உள்ள இடங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து அமையும். சேர்க்கை பெற்ற பின் வேறு நிறுவனங்களுக்கு இட மாறுதல் கோர இயலாது. மாணவர் சேர்க்கையும் தெரிவும் ரத்து செய்யப்படும்.

## இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள தொடக்கக் கல்வி பட்டயப் படிப்பு அளிக்கும் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களின் பட்டியல்

**இணைப்பு–1**

**மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை–6**

**தொடக்கக்கல்வி பட்டயப் படிப்பு – மாணவர் சேர்க்கை 2020–2021**

| வ. எண். | ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களின் பெயர் (தமிழ் வழி) | வகை | நிர்வாகம் | மாணவர் எண்ணிக்கை | ஒற்றைச் சாளரமுறைக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் |
|---|---|---|---|---|---|
| **1. சென்னை மாவட்டம்** | | | | | |
| 1. | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருவல்லிக்கேணி, சென்னை – 600 005. தொலைபேசி எண் :044 – 28445561 | இருபாலர் | அரசு | 50 | 50 |
| 2. | அரசு மகளிர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், இராயப்பேட்டை, சென்னை – 600 014. தொலைபேசி எண் :044 – 28445561 | பெண்கள் | அரசு | 40 | 40 |
| **2. கோவை மாவட்டம்** | | | | | |
| 3. | அரசு மகளிர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், இராஜ வீதி, கோவை – 641 001. தொலைபேசி எண் : 0422–2399315 | பெண்கள் | அரசு | 40 | 40 |
| **3. கடலூர் மாவட்டம்** | | | | | |
| 4. | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், வடலூர் – 607 303. தொலைபேசி எண் : 04142-259394 | இருபாலர் | அரசு | 50 | 50 |
| 5. | ஒன்றிய ஆசிரியர் கல்வி நிறுவனம், மஞ்சகுப்பம், கடலூர் மாவட்டம்– 607 001 | இருபாலர் | அரசு | 50 | 50 |
| **4. ஈரோடு மாவட்டம்** | | | | | |
| 6. | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், பெருந்துறை, ஈரோடு மாவட்டம் – 638 052. தொலைபேசி எண் : 04294–221574 | இருபாலர் | அரசு | 100 | 100 |
| **5. காஞ்சிபுரம் மாவட்டம்** | | | | | |
| 7. | ஒன்றிய ஆசிரியர் கல்வி நிறுவனம், இலத்தூர், பவுஞ்சூர், காஞ்சிபுரம் மாவட்டம் – 603 305 | இருபாலர் | அரசு | 50 | 50 |
| **6. கரூர் மாவட்டம்** | | | | | |
| 8. | அரசு மகளிர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், சின்னதாராபுரம், கரூர் மாவட்டம்– 639 202 தொலைபேசி எண் : 04320 – 233244 | பெண்கள் | அரசு | 40 | 40 |
| **7. கிருஷ்ணகிரி மாவட்டம்** | | | | | |
| 9. | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கிருஷ்ணகிரி – 635 001. தொலைபேசி எண் : 04343–230763, 04343–238878 | இருபாலர் | அரசு | 50 | 50 |

| வ. எண். | ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களின் பெயர் (தமிழ் வழி) | வகை | நிர்வாகம் | மாணவர் எண்ணிக்கை | ஒற்றைச் சாளரமுறைக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் |
|---|---|---|---|---|---|
| **8. நாகப்பட்டினம் மாவட்டம்** | | | | | |
| 10. | ஒன்றிய ஆசிரியர் கல்வி நிறுவனம், வேதாரண்யம்(அ), பிளாட் எண். 641, கீழப்பதி, மகாராஜபுரம் கிராமம், வேதாரண்யம்(அ), நாகப்பட்டினம் மாவட்டம்–614810. கைபேசி எண்: 9940844471 | இருபாலர் | அரசு | 50 | 50 |
| **9. பெரம்பலூர் மாவட்டம்** | | | | | |
| 11. | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,பாடாலூர் (மேற்கு), பெரம்பலூர் மாவட்டம் – 621 109 | இருபாலர் | அரசு | 50 | 50 |
| 12. | ஒன்றிய ஆசிரியர் கல்வி நிறுவனம், அரசு மேல்நிலை பள்ளி, ஒலைப்பாடி, வேப்பூர், பெரம்பலூர் மாவட்டம்–621717 | இருபாலர் | அரசு | 50 | 50 |
| **10. புதுக்கோட்டை மாவட்டம்** | | | | | |
| 13. | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், புதுக்கோட்டை–622 004. தொலைபேசி எண் : 04322–270983 | இருபாலர் | அரசு | 100 | 100 |
| **11. சேலம் மாவட்டம்** | | | | | |
| 14. | அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம், கெங்கவல்லி, சேலம் மாவட்டம்– 636 105. தொலைபேசி எண் : 04282–232140 | இருபாலர் | அரசு | 40 | 40 |
| **12. தஞ்சாவூர் மாவட்டம்** | | | | | |
| 15. | அரசு (பெண்கள்) ஆசிரியர் பயிற்சி நிறுவனம், தஞ்சாவூர் – 613 001. அலைபேசி எண் : 73730 03376 | பெண்கள் | அரசு | 40 | 40 |
| **13. நீலகிரி மாவட்டம்** | | | | | |
| 16. | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கோத்தகிரி – 643 217. தொலைபேசி எண் : 0466–271860 | இருபாலர் | அரசு | 100 | 100 |
| **14. தேனி மாவட்டம்** | | | | | |
| 17. | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், உத்தமபாளையம் – 625 533. தேனி மாவட்டம். தொலைபேசி எண் : 04554–267703 | இருபாலர் | அரசு | 100 | 100 |
| **15. திருவண்ணாமலை மாவட்டம்** | | | | | |
| 18. | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கீழ்ப்பெண்ணாத்தூர், திருவண்ணாமலை மாவட்டம் – 604 601. தொலைபேசி எண் : 04175 – 242308 | இருபாலர் | அரசு | 100 | 100 |

| வ. எண். | ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களின் பெயர் (தமிழ் வழி) | வகை | நிர்வாகம் | மாணவர் எண்ணிக்கை | ஒற்றைச் சாளரமுறைக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் |
|---|---|---|---|---|---|
| **16. திருநெல்வேலி மாவட்டம்** | | | | | |
| 19. | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், முனைஞ்சிப்பட்டி – 627 355, திருநெல்வேலி மாவட்டம். தொலைபேசி எண் : 04635 – 258566, 295511 | இருபாலர் | அரசு | 100 | 100 |
| 20. | அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம், சமூகரங்கபுரம், திருநெல்வேலி மாவட்டம் – 627 112. தொலைபேசி எண் : 04637 – 235184 | இருபாலர் | அரசு | 40 | 40 |
| **17. திருவாரூர் மாவட்டம்** | | | | | |
| 21. | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், தஞ்சாவூர் ரோடு, மன்னார்குடி, திருவாரூர் மாவட்டம் – 614 001. தொலைபேசி எண் : 04367–223559 | இருபாலர் | அரசு | 50 | 50 |
| 22. | ஒன்றிய ஆசிரியர் கல்வி நிறுவனம், அரசு மேல்நிலை பள்ளி வளாகம், கொராடாச்சேரி, திருவாரூர் மாவட்டம்–613703 | இருபாலர் | அரசு | 50 | 50 |
| **18. வேலூர் மாவட்டம்** | | | | | |
| 23. | அரசு மகளிர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், இராணிப்பேட்டை – 632 402. வேலூர் மாவட்டம். தொலைபேசி எண் : 04172–272210 | பெண்கள் | அரசு | 40 | 40 |
| **19. விழுப்புரம் மாவட்டம்** | | | | | |
| 24. | ஒன்றிய ஆசிரியர் கல்வி நிறுவனம், பிரம்மதேசம், விழுப்புரம் மாவட்டம்– 604 301 கைபேசி எண்: 9500822647 | இருபாலர் | அரசு | 50 | 50 |
| **20. விருதுநகர் மாவட்டம்** | | | | | |
| 25. | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், பாலையம்பட்டி, விருதுநகர் மாவட்டம் – 626 112. தொலைபேசி எண் : 04566–220020, 223310 | இருபாலர் | அரசு | 100 | 100 |
| 26. | அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம், ஜோகில்பட்டி, விருதுநகர் மாவட்டம் – 626 104. தொலைபேசி எண் : 04566-280153 | இருபாலர் | அரசு | 40 | 40 |

## இணைப்பு – 2.

## இதர பயிற்று மொழி உள்ள ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள்

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் (ஆங்கில வழி) | வகை | நிர்வாகம் | மொத்த ஒதுக்கீடு |
|---|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், திருவல்லிகேணி, சென்னை–05<br>கைபேசி எண்: 7373003382 | இருபாலர் | அரசு | 50 |

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் (தெலுங்கு வழி) | வகை | நிர்வாகம் | மொத்த ஒதுக்கீடு |
|---|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், கிருஷ்ணகிரி – 635 001, தொலைபேசி எண் : 04343 – 230763, 04343 –238878 | இருபாலர் | அரசு | 50 |
| 2. | அரசு மகளிர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், இராணிப்பேடை, வேலூர் மாவட்டம் – 632 402. தொலைபேசி எண் : 04172–272210 | பெண்கள் | அரசு | 40 |
| 3. | அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனம், கெங்கவல்லி, சேலம் – 636 105. தொலைபேசி எண் : 04282 – 232140 | இருபாலர் | அரசு | 40 |

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் (உருது வழி) | வகை | நிர்வாகம் | மொத்த ஒதுக்கீடு |
|---|---|---|---|---|
| 1. | அரசு மகளிர் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், இராயப்பேட்டை, சென்னை – 600 014. | பெண்கள் | அரசு | 40 |
| 2. | அரசு ஆண்கள் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், தாயார் சாகிப், சென்னை – 600 002. | ஆண்கள் | அரசு | 40 |